# D E P O S I T I O N   O F   W I T N E S S

--------

## IN THE COURT OF SPECIAL SUBORDINATE JUDGE(MACT), DHARMAPURI.

## CASE NO. M.C.O.P. 156/2025

Deposition of witness for

| | | | | |
|---|---|---|---|---|
| Name: | ஜெயசீலன் | | Caste: | |
| Father's Name: | மணிவண்ணன் | | Calling: | இளநிலை உதவியாளர் |
| Village | சிறுபூலுவப்பட்டி | | Age | 30 |
| Taluk | திருப்பூர் வடக்கு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.07.2026.

**எ.ம.சா.2 ஜெயசீலன்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:**

அழைப்பாணையின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிகிறேன். அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதி அளித்து வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு வழங்கிய கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். இந்த கடிதம் எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 39 CQ 6583 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகலை தாக்கல் செய்கிறேன். TN 39 CQ 6583 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் எ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வாகனத்திற்கு வழங்கப்பட்ட சோதனை அறிக்கை நகலை தாக்கல் செய்கிறேன்.

இந்த சோதனை அறிக்கை நகல் எ.ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வாகனத்திற்காக ரூ.5,000/– அபராதம் செலுத்தியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி அபராதம் செலுத்தியதற்கான ஆவணம் எ.ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிவசந்துரு, த/பெ ராமு என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என தேடிப்பார்த்தற்கான கணினி நகல் தாக்கல் செய்கிறேன். சிவசந்துரு, த/பெ ராமு என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என தேடிப்பார்த்தற்கான கணினி நகல் எ.ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட சிவசந்துரு, த/பெ ராமு என்பவருக்கு எங்களது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டதற்கான குறிப்புகள் எதுவும் இல்லை. ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பொதுவாக ஒரு நபர் வேறு மாவட்டத்திலும் ஓட்டுனர் உரிமம் பெறலாம் என்றால் சரிதான். அந்த மாவட்டம் சம்மந்தப்பட்ட அடையாள அட்டை இருந்தால் தான் ஓட்டுனர் உரிமம் பெறமுடியும். அவ்வாறு வேறு மாவட்டத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றிருந்தால் அந்த விபரம் எங்களது அலுவலகத்திற்கு தெரியவராது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுனர் சிவசந்துரு என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் ஒப்படைக்கவில்லை என மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓட்டுனர் உரிமம் ஒப்படைக்கவில்லை என்பதற்காக தான் அந்த வாகனத்தின் தரப்பில் இருந்து

அபராதம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதற்காக தான் செலுத்தப்பட்டுள்ளது. இந்த அபராத தொகையை வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் இருந்து செலுத்தப்பட்டதா அல்லது வாகனத்தின் ஓட்டுனர் தரப்பில் இருந்து செலுத்தப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சிவசந்துரு என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றும், சரிவர ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Taken down before/by me in open court and read over/Interpreted to the witness and acknowledged by him/her to be Correct.

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.07.29 17:17:58 +0530

Special Sub Judge,(MACT)
Dharmapuri.